

பாடம் 1

டிசம்பர் 28-ஜனவரி 3

# தேவன் மனப்பூர்வமாய் அன்புகூருகிறார்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யாத் 33:15–22; ஓசியா 14:1– 4; வெளி 4:11; யோவான் 17:24; மத் 22:1–14; யோவான் 10:17, 18 .

**மனன வசனம்:** நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்; என் கோபம் அவர்களைவிட்டு நீங்கிற்று. ஓசியா 14:4.

இயேசு முன்னுரைத்ததுபோல, இயேசுவை பேதுரு மூன்றுமுறை மறுதலித்தாலும்கூட, அவர் மறுதலித்ததோடு அந்தச் சம்பவம் முடியவில்லை. இயேசு உயிர்த்தெழுந்தபிறகு பேதுருவிடம், ‘‘அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?’’ என்று கேட்டார். அதற்கு பேதுரு, ‘‘ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்’’ என்றான். உடனே இயேசு, ‘‘ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக’’ என்றார். மீண்டும் பேதுருவிடம் இயேசு, ‘‘என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?’’ என்று கேட்டார். அதற்கு பேதுரு, ‘‘ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்’’ என்று சொன்னார். பிறகு, மீண்டும், மூன்றாவது முறையாகப் பேதுருவிடம் இயேசு, ‘‘என்னை நேசிக்கிறாயா?’’ என்று கேட்டார். அப்போது ‘‘துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர்’’ என்றார். யோவான் 21:15-17. இயேசுவை மூன்றுமுறை பேதுரு மறுதலித்தது போல, ‘‘என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?’’ என்கிற முக்கியமான கேள்வியை இயேசு மூன்றுமுறை கேட்டதன்மூலம், பேதுருவை அவர் மூன்றுமுறை குணப்படுத்தினார்.

பேதுருவின் சூழ்நிலைகளைவிட நம் சூழ்நிலைகள் வித்தியாசமாக இருந்தாலும், அதிலுள்ள நியதி மாறாத ஒன்று. அதாவது, பேதுருவிடம் இயேசு கேட்ட அதே கேள்வியையே, இப்பூமியில் இப்போது வாழ்கிற நம் ஒவ்வொருரிடமும் கேட்கிறார். நீ என்னை நேசிக்கிறாயா?

அந்தக் கேள்விக்கு நாம் சொல்கிற பதிலில்தான் எல்லாமே இருக்கிறது.

*2025 ஜனவரி 4 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# நியாயமான எதிர்பார்ப்புகளுக்கும் அப்பால்

தேவன் நம்மிடம், ‘‘நேசிக்கிறாயா?’’ என்று கேட்பது மட்டுமல்லாமல், நம்மையும் நேசிக்கிறார்; அதுவும் தாராளமாக நேசிக்கிறார். நம் கற்பனைக்கும் அதிகமாக ஒவ்வொருவரையும் தாராளமாக நேசிக்கிறார். தம் மக்களுடைய வரலாற்றில் அவர் செயல்பட்ட விதத்திலிருந்து இந்த அன்பை அறிந்துகொள்கிறோம்.

**யாத் 33:15-22 இன் பின்னணியை யோசியுங்கள். தேவனுடைய சித்தம், அன்பு பற்றி இந்த வசனங்கள், குறிப்பாக 19ம் வசனம் வெளிப்படுத்துவது என்ன?**

---

எல்லாமே போனதுபோலத் தெரிந்தது. தேவன் தம் மக்களை அற்புதமாக எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த சில நாட்களில், இஸ்ரவேல் மக்கள் தேவனுக்கு எதிராகக் கலகம்செய்து, ஒரு பொன் கன்றுகுட்டியைத் தொழுதுகொண்டார்கள். மோசே மலையின்மீதிருந்து இறங்கினபோது, அவர்கள் செய்ததைக் கண்டு, பத்துக்கற்பனைகள் எழுதியிருந்த கற்பலகைகளை எறிந்து, நொறுக்கிப்போட்டார். தேவன் தாராளமாக அருளியிருந்த உடன்படிக்கை சிலாக்கியங்களுக்கும் ஆசீர்வாதங்களுக்கும் தங்களுக்கு எந்த உரிமையும் இல்லாதபடி மக்கள் செய்தாலும்கூட, அவர்களோடு உடன்படிக்கை உறவை தாராளமாகத் தொடருவதற்கு தேவன் தீர்மானித்தார்; ஆனால் அவர்கள் அந்த உடன்படிக்கை ஆசீர்வாதங்களுக்குத் தகுதியாக இல்லை என்பதே உண்மை.

‘எவன்மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் கிருபையாயிருப்பேன்; எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன்’ என்று யாத் 33:19 சொல்கிற வார்த்தைகளை, தேவன் தன்னிச்சையாக சிலர்மீது இரக்கமும் கிருபையும் காட்டத் தீர்மானிப்பதாகவும், சிலரை ஒதுக்குவதாகவும் தவறாக அர்த்தம் காண்கிறார்கள். ஆனால் வசனம் சொல்லப்படுகிற சூழலில், அந்த அர்த்தம் இல்லை. தேவன் அவ்வாறு செயல்படுவதில்லை; ஆனாலும் தேவன் சிலரை நித்திய அழிவுக்கும் நித்திய ஆக்கினைக்கும் முன்குறிப்பதாக பிரபல இறையியல் கருத்துகள் சில கூறுகின்றன.

அப்படியானால் தேவன் இங்கே சொல்வது என்ன? சகலத்தையும் சிருஷ்டித்தவர் என்கிற முறையில், மனிதர்களில் கொஞ்சமும் பாத்திரமற்றவர்கள்மீதுகூட கிருபையும் இரக்கமும் காட்டுவதற்கு தமக்கு உரிமையும் அதிகாரமும் உண்டு என்று சொல்கிறார். பொன் கன்றுக்குட்டியால் கலகம்செய்த மக்கள் அவரது இரக்கத்தைப் பெறத் தகுதியில்லாமல் இருந்தநிலையிலும், அவர்கள் மீது இரக்கம் காட்டுகிறார்.

இவ்வாறு நியாயமான எதிர்பார்ப்புகளையும் தாண்டி தேவன் தம் அன்பை வெளிப்படுத்துகிற பல சம்பவங்களில் இதுவும் ஒன்று. இது நம் எல்லாருக்குமே நற்செய்தி அல்லவா?

---

**நியாயமான எதிர்பார்ப்புகளையும் தாண்டி தேவன் எவ்வாறெல்லாம் உங்களுக்கு தம் அன்பை வெளிப்படுத்தியிருக்கிறார்?**

---

# திரும்பச் செலுத்தப்படாத அன்பு

விழுந்துபோனமனுக்குலத்தின்மீது தேவன்தீராத அன்புவைத்திருப்பதற்கு அருமையான ஓர் உதாரணம் ஓசியாவின் அனுபவம். ஓசியா தீர்க்கதரிசியிடம் தேவன், ‘‘போய், ஒரு சோர ஸ்திரீயையும் சோரப்பிள்ளைகளையும் உன்னிடமாகச் சேர்த்துக்கொள்; தேசம் கர்த்தரைவிட்டு விலகிச் சோரம்போயிற்று’’ என்று கட்டளையிட்டார். ஓசியா 1:2. இஸ்ரவேலர் உண்மையின்றி, ஆவிக்குரிய வேசித்தனத்தில் இருந்தாலும், அவர்கள்மீது தேவன் அன்பாக இருந்ததற்கு ஒரு விளக்கப்பாடமாக ஓசியாவும் உண்மையற்ற அவரது மனைவியும் இருந்தார்கள். தகுதியற்றவர்கள்மீது தேவன் தம் அன்பை தாராளமாகப் பொழிவதை அந்தச் சம்பவம் காட்டுகிறது.

தேவன் உண்மையும் அன்பும் உள்ளவராக இருக்க, மக்கள் அவருக்கு எதிராக மீண்டும் மீண்டும் கலகம்பண்ணினார்கள். உண்மையற்ற ஒரு வாழ்க்கைத்துணையின் அன்புகிடைக்காத நிலையில்தான் தேவனும் அன்புகிடைக்காமல் இருந்ததாக வேதாகமம் மீண்டும்மீண்டும் சொல்கிறது. தேவன் தம் மக்களை முற்றிலுமாக, உண்மையாக நேசித்தார்; ஆனால் அவர்கள் அவரைப் பரியாசம்பண்ணினார்கள்; பிற தெய்வங்களைச் சேவித்து, தொழுதார்கள்; மிகுந்த துக்கத்தை உண்டாக்கினார்கள்; சரிசெய்ய முடியாத அளவுக்கு உறவை முறித்தார்கள்.

**தேவன் தம் மக்கள்மீது நிலையான அன்பு வைத்திருந்ததுபற்றி ஓசியா 14:1-4 சொல்வது என்ன?**

தம் மக்கள் மீண்டும்மீண்டும் கலகம்செய்தபிறகும் தேவன் இவ்வாறு சொல்கிறார்: ‘அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்’. இங்கு, ‘மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்’ என்பதில் வருகிற எபிரெய வார்த்தை **நெடபா**; அது, தானாகவே கொடுக்கப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறது. ஆசரிப்புக்கூடார முறைமையில் உற்சாகப்பலிகளைச் செலுத்தும்போது இந்த வார்த்தைதான் வருகிறது.

ஓசியாவிலும், வேதாகமச்சம்பவங்கள் முழுவதிலும், தம் மக்கள்மீது தேவன் மிகுந்த அர்ப்பணிப்பும் மனதுருக்கமும் காட்டுகிறார். அவர்கள் தங்கள் நேசர்களுக்குப் பின்னே சென்றபோதிலும், சீர்செய்யவே முடியாத அளவுக்கு உடன்படிக்கை உறவை முறித்தபோதிலும், தேவன் தம் சுயாதீனசித்தத்தால், அவர்கள்மீது தொடர்ந்து தம் அன்பைப் பொழிந்தார். மக்கள் தேவ அன்புக்குப் பாத்திரமாக இருக்கவில்லை; உரிமை கோரமுடியாத அளவுக்கு அதைப் புறக்கணித்து, அந்த உரிமையை இழந்திருந்தார்கள். ஒழுக்கமாக இருந்தார்களோ இல்லையோ, தேவன் அவர்கள்மீது தொடர்ந்து அன்பைப் பொழிகிறார். மனப்பூர்வமாகவும், தன்னார்வத்தோடும் நேசிக்கிறார்.

---

**தேவன் தூரத்தில் இருக்கிறார், அவர் கடுமையான ஆட்சியாளர், நீதிபதி என்று அநேகர் நினைக்கிறார்கள். உண்மையற்ற ஒரு வாழ்க்கைத்துணையிடம் அன்பைப் பெறமுடியாத ஒருவரைப்போல, பரியாசத்திற்கும் துக்கத்திற்கும் ஆளான நிலையில் தேவன் இருக்கிறார் என்கிற காட்சி, அவரை வித்தியாசமாகப் பார்ப்பதற்கு எவ்வாறு உதவுகிறது? தேவனோடு உங்களுக்குள்ள உறவைப் பார்க்கிற விதத்தை அது எவ்வாறு மாற்றுகிறது?**

# மனப்பூர்வமாக அருளப்பட்ட அன்பு

இஸ்ரவேலர் தொடர்ந்து கலகம்செய்த போதிலும், தேவன் அவர்களை மட்டுந்தான் மனப்பூர்வமாக நேசித்தாரா; இல்லை. நாமும் பாவிகளாக இருக்கும்போதே நம்மீது மனப்பூர்வமாக தொடர்ந்து அன்பைப் பொழிகிறார். நாம் தேவ அன்புக்குப் பாத்திரவான்கள் அல்லர்; அதை நாம் சம்பாதிக்கவும் முடியாது. இன்னொரு புறம், தேவனுக்கு நாம் அவசியமும் இல்லை. வேதாகமத்தின் தேவனுக்கு எதுவுமே தேவையில்லை. அப் 17:25. தேவன் எல்லோரையும் தம்முடைய சொந்த மனவிருப்பத்தின்படியே நேசிக்கிறார்.

**சிருஷ்டிப்பை எப்படியும் நடத்த தேவனுக்கு சுதந்திரம் இருப்பதுபற்றி வெளி 4:11; சங் 33:6 வசனங்கள் சொல்வது என்ன?**

---

தேவன் விருப்பத்தோடு இந்த உலகத்தைச் சிருஷ்டித்தார். இதினிமித்தம் தேவன் சகல மகிமைக்கும் கனத்திற்கும் வல்லமைக்கும் பாத்திரராக இருக்கிறார். தேவன் எந்த உலகத்தையும் சிருஷ்டிக்கவேண்டிய அவசியம் இருக்கவில்லை. உலகத்தோற்றத்திற்கு முன்னரே, தேவத்துவத்திற்குள்ளாகக் காணப்பட்ட உறவில் தேவன் மகிழ்ந்துவந்தார்.

**இந்த உலகம் உருவாக்கப்படுவதற்குமுன்னரே தேவ அன்பு காணப்பட்டதுபற்றி யோவான் 17:24 என்ன சொல்கிறது?**

---

தேவனுக்கு தம் அன்பைக் காட்டுவதற்குச் சிருஷ்டிகள் தேவைப்படவில்லை. ஆனால் அவரது அன்பின் தன்மையின்படி, தேவன் இந்த உலகத்தைச் சிருஷ்டிக்கத் தீர்மானித்தார்; சிருஷ்டிகளோடு அன்பின் உறவை ஏற்படுத்தினார்.

தம்முடைய தயாள அன்பின் அடையாளமாக இந்த உலகத்தை விருப்பத்தோடு தேவன் சிருஷ்டித்தது மட்டுமல்லாமல், மனிதர்கள் ஏதேனில் பாவத்தில் விழுந்த பிறகும், நம் தனிப்பட்ட பாவத்திற்கு மத்தியிலும் மனிதர்களை தொடர்ந்து மனப்பூர்வமாகச் சிநேகிக்கிறார்.

ஏதேனில் ஆதாமும் ஏவாளும் விழுந்தபிறகு, அவர்கள் தொடர்ந்து வாழவும், தேவ அன்பைப் பெறவும் உரிமையை இழந்தார்கள். ஆனால், 'தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிற' தேவன், தம் மிகுந்த அன்பாலும் இரக்கத்தாலும் கிருபையாலும் அவர்கள் தொடர்ந்து உயிர்வாழும்படிச் செய்தார்; மனிதர்கள் மீண்டும் தம்மோடு அன்பில் ஒப்புரவாகும்படி ஒரு வழியை உண்டாக்கினார். எபி 1:3. அந்த ஒப்புரவாகுதல் நமக்கும் சொந்தமானதே.

---

**இந்த உலகம் விழுகையிலும் தீமையிலும் இருக்கிறபோதிலும், தேவன் தொடர்ந்து தம் அன்பைப் பொழிகிறார் என்கிற உண்மை, அவரது அன்பையும் குணத்தையும்பற்றி என்ன சொல்கிறது? நாம் திரும்ப அவரில் அதிகம் அன்புகூருவதற்கு இந்த உண்மை எவ்வாறு உதவவேண்டும்?**

---

---

# அழைக்கப்பட்டோர் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டோர் சிலர்

தேவன் தமது சுயாதீன சித்தத்தால் மனிதர்களை மனப்பூர்வமாக நேசிப்ப தோடு மட்டுமல்லாமல், அவர்கள் தம்மேல் திரும்ப அன்புசெலுத்தவும் அழைக் கிறார். அதற்கு தமது அன்பை அவர்கள் ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ தேர்ந்தெடுக்கிற உரிமையைக் கொடுக்கிறார்; அது கலியான விருந்துகுறித்த உவமையிலும் (வேறு பல இடங்களிலும்) தெளிவாகத் தெரிகிறது.

**மத்தேயு 22:1-14இலுள்ள உவமையின் அர்த்தம் என்ன?**

கலியாண விருந்துபற்றி கிறிஸ்து சொன்ன உவமையில், ஒரு ராஜா தன் குமாரனுக்குக் கலியாணம் ஏற்பாடுசெய்து, தன் வேலைக்காரர்களை அனுப்பி, ''கலியாணத்திற்கு' வரச்சொல்லுகிறார்; ஆனால், 'வர மனதில்லாதிருந்தார்கள்' மத் 22:2,3. அவர்களை அழைத்துவர ராஜா ஒன்றுக்கும் மேற்பட்ட முறை தன் வேலைக்காரர்களை அனுப்புகிறார்; ஆனால் அவருடைய அழைப்பை அவர் கள் நிராகரித்தார்கள்; அதைவிட மோசமாக, அவருடைய வேலைக்காரர்களைப் பிடித்து, அவர்களைக் கொன்றார்கள். மத் 22:4-6.

தம் வேலைக்காரரை அழித்தவர்களுக்குத் தகுந்த பதிலடி கொடுத்தபிறகு, அந்த ராஜா தன் வேலைக்காரர்களிடம், 'விருந்து ஆயத்தமாயிருக்கிறது, அழைக்கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரராய்ப் போனார்கள். ஆகையால், நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக்கொண்டு வாருங்கள்' என்று சொன்னார். மத் 22:8,9. பிறகு, கலி யாண வஸ்திரம் தரித்திராத ஒருவனை வெளியேற்றச் சொல்கிறார்; அவன், கலி யாண விருந்தில் கலந்துகொள்ள அந்த ராஜாவிடமிருந்து கலியாண வஸ்திரத் தைப் பெற வேண்டியிருந்தது; இறுதியாக, அந்த உவமையை மிகவும் அர்த்த மிக்க வார்த்தைகளுடன் இயேசு முடிக்கிறார்: 'அந்தப்படியே, அழைக்கப்பட்ட வர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்'. மத் 22:14.

இதன் அர்த்தம் என்ன? 'தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்' கலியாண விருந் துக்கு வரும்படி ஆண்டவர் கொடுக்கிற அழைப்பை ஏற்றுக்கொள்கிறவ்வர்கள். அந்த உவமையில் வருகிற 'அழை' என்பதற்கான கிரேக்க வார்த்தை **கேலியோ**; ஒருவர் 'தெரிந்துகொள்ளப்பட்டவரா' (**எக்லெக்ட்டாஸ்**) என்பதைத் தீர்மானிப்பது, அந்த அழைப்பை அவர் ஏற்றுக்கொள்கிறாரா என்பதைப் பொருத்ததே.

தேவன் அனைவரையும் கலியாண விருந்துக்கு அழைக்கிறார். ஆனால் தேவ அன்பை மறுதலிக்கிற உரிமை எல்லாருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. அன்புகூருவதற்குச் சுதந்திரம் அவசியம். தேவன் எவர்மீதும் தம் அன்பை கட்டா யமாகத் திணிக்கமாட்டார். தேவனோடு அன்பின் உறவைவைப்பதை நாம் புறக் கணிக்க முடியும் என்பதுதான் வருத்தகரமான உண்மை.

தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அந்த அழைப்பை ஏற்றுக்கொள்கிறவர் கள். தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு, நம் புத்திக்கும் எட்டாத ஆச் சரியமானவற்றை தேவன் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார். இவை அனைத்தி லும் அன்பும், அன்பில் புதைந்துள்ள சுதந்திரமும் முக்கியப் பங்காற்றுகின்றன.

**நீங்கள் கலியாண விருந்துக்கான அழைப்பை ஏற்றுக்கொண்டதையும், சரியான வஸ்திரம் தரித்திருப்பதையும் உங்களுடைய வாழ்க்கையில் வெளிப்படுத்துவது என்ன?**

# நமக்காக சிலுவையில் அறையப்பட்டார்

தம்மோடு ஓர் அன்பின் உறவை ஏற்படுத்த ஒவ்வொருவரையும் தேவன் அழைக்கிறார்; ஆனால், அந்த அழைப்பை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறவர்கள் மட்டுமே நித்திய விளைவுகளை அனுபவிக்கலாம். கலியாண விருந்து உவமையில், ராஜா அழைத்த அநேகர், 'வர மனதில்லாதிருந்தார்கள்'. மத் 22:3.

அதனால்தான் தாம் சிலுவையில் அறையப்படவிருந்த சமயத்தில், இயேசு இவ்வாறு புலம்பினார்: 'எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச்சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று'. மத் 23:37. கிறிஸ்து அவர்களைக் கூட்டிச்சேர்க்க விரும்பினார்; அவர்களுக்கு மனதில்லை! 'மனதாயிருத்தல்' என்பதற்கான அதே கிரேக்க வார்த்தைதான் (தெலோ), கிறிஸ்து அவர்களை இரட்சிக்கவிரும்பியதையும், அவர்கள் இரட்சிக்கப்படவிரும்பாதிருந்ததையும் சுட்டிக்காட்ட பயன்படுகிறது (அதே வார்த்தை மத்தேயு 22:3இலும் வருகிறது).

ஆனாலும் அவர்களுக்காகவும் நமக்காகவும்தான் இயேசு சிலுவைக்குச் சென்றார். எத்துணை ஆச்சர்ய அன்பு! மனிதர்களின் பாவம் மரணத்தைக் கொண்டுவந்தது; ஆனால் பழுதான உறவைச் சீர்ப்படுத்துவதற்கான விலையை (கிறிஸ்துவுக்குள்ளாக) தேவன் செலுத்தி, பரலோகத்திற்கும் பூமிக்கும் இடையே ஒரு வழியை உருவாக்கியிருக்கிறார். அதேசமயம், தாம் மனப்பூர்வமாக விரும்பினால் ஒழிய, நம்மீது அன்புகூருவதற்கு எவ்விதக் கடமைக்கும் கீழ்ப்பட்டிராத நிலையிலும், நம்மீது தொடர்ந்து அன்பைப் பொழிகிறார்.

**யோவான் 10:17,18 ஆகிய வசனங்களை கலாத்தியர் 2:20 உடன் ஒப்பிடுங்கள். இந்த வசனங்களில் நமக்குள்ள செய்தி என்ன?**

தேவ அன்பின் இறுதி வெளிப்பாட்டில், அதாவது சிலுவையில், தேவன் சுயாதீன சித்தத்தோடு தம்மையே நமக்காகக் கொடுத்தார். தேவன் தமது 'சொந்த முன்னெடுப்பால்' தம் ஜீவனைக் கொடுத்தார். எவரும் அவரது ஜீவனை அவரிடமிருந்து எடுத்துக்கொள்ளவில்லை; உலகத்தோற்றத்திற்கு முன்னரே பரலோகத்தில் போடப்பட்ட மீட்பின் திட்டத்தின்படி, அதை அவர் மனப்பூர்வமாக ஈந்தார்.

'நம் மீட்பிற்கான திட்டம் பின்னர் போடப்பட்டதல்ல, ஆதாம் விழுந்தபிறகு போடப்பட்டதல்ல. அது "ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்த ... இரகசியத்தின்" வெளிப்பாடு. ரோமர் 16:25. அது நித்தியக் காலம்முதல் தேவனுடைய சிங்காசனத்தின் அடிப்படையாக இருந்த நியதிகளின் நிறைவேறுதல். சாத்தானுடைய துரோகத்தையும், அந்தத் தேவதுரோகத்தின் வஞ்சக வல்லமையால் உண்டான மனிதனின் விழுகையையும் ஆரம்பம்முதலே தேவனும் கிறிஸ்துவும் அறிந்திருந்தார்கள். பாவத்தை தேவன் நியமிக்கவில்லை; ஆனால் அது வருமென முன்னறிந்திருந்தார்; அந்தக் கொடிய அவசரநிலையை எதிர்கொள்ள வழியையும் உண்டாக்கியிருந்தார். அவர் உலகத்தின்மீது மாபெரும் அன்பு வைத்திருந்ததால், "விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு" தம் ஒரே பேறான குமாரனைக் கொடுப்பதற்கு உடன்படிக்கை பண்ணினார். யோவான் 3:168'.

# மேலும் படிக்க:

‘தேவனைக்குறித்த தவறான புரிதலின் அந்தகாரம் உலகத்தைச் சூழ்ந்துள்ளது. அவரது குணம்பற்றிய அறிவை மனிதர்கள் இழந்துவருகிறார்கள். அதைத் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள்; தவறாக அர்த்தங்கற்பிக்கிறார்கள். இந்தச் சமயத்தில் தேவனிட மிருந்து ஒரு செய்தியை அறிவிக்கவேண்டியுள்ளது; அது ஜொலிக்கிற செல்வாக்கும், இரட்சிப்புக்கேற்ற வல்லமையும் உடைய செய்தி. அவரது குணத்தை அறிவிக்கவேண்டும். இந்த உலகத்தின் அந்தகாரத்திற்குள் அவரது மகிமையின் ஒளி, அவரது நற்குணம், இரக்கம், சத்தியம் ஆகியவற்றின் ஒளி வீசப்படவேண்டும்.

‘இந்தப் பணியைத்தான் ஏசாயா தீர்க்கரிசி பின்வருமாறு சொல்லியிருக்கிறார், “எருச லேம் என்னும் சுவிசேஷகியே, நீ உரத்த சத்தமிட்டுக் கூப்பிடு, பயப்படாமல் சத்தமிட்டு, யூதா பட்டணங்களைநோக்கி: இதோ, உங்கள் தேவன் என்று கூறு. இதோ, கர்த்தராகிய ஆண்ட வர் பராக்கிரமசாலியாக வருவார்; அவர் தமது புயத்தினால் அரசாளுவார்; இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடேகூட வருகிறது; அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது” ஏசா 40:9,10.

‘மணவாளனுடைய வருகைக்காகக் காத்திருப்பவர்கள் மக்களிடம், “இதோ உங்கள் தேவன்” என்று சொல்லவேண்டும். அவரது அன்பான குணத்தை வெளிப்படுத்துவதே உலகத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய இரக்கத்தின் கடைசி ஒளிக்கதிர்கள், இரக்கத்தின் கடைசிச் செய்தி. தேவபிள்ளைகள் அவரது மகிமையை வெளிப்படுத்தவேண்டும். தங்கள் வாழ்க்கையிலும் குணத்திலும் தேவகிருபை தங்களுக்குச் செய்திருப்பதை வெளிப்படுத்த வேண்டும்.

‘நீதியின் சூரியனுடைய வெளிச்சம் நற்கிரியைகளில் பிரகாசிக்கவேண்டும் – சத்திய வார்த்தைகளிலும், பரிசுத்த கிரியைகளிலும் பிரகாசிக்கவேண்டும்’.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *‘தேவனே இல்லை’ என்கிற கருத்தைவிட, ‘தேவன் நம்மை வெறுக்கிறார்’ என்கிற கருத்து மிகவும் மோசமானது. அது உண்மையாக இருந்திருந்தால், நாம் இருக்கிற இந்த உலகம் எவ்வாறு வித்தியாசமாக இருந்திருக்கும்?*

2 *இன்று நம் உலகில் தேவனுடைய குணம்பற்றி தவறான புரிதல் அதிகம் காணப் படுவதற்குக் காரணம் என்ன? அதுபற்றி யோசியுங்கள், மக்கள் தேவனுடைய அன்பின் குணத்தை அதிக தெளிவாகக் காண்பதற்கான வழிகளைத் தியானியுங்கள்.*

3 *இன்று தேவனுடைய குணம்பற்றி அறிவிக்கவேண்டிய செய்தி என்ன? தேவ அன்பின் எதார்த்தம்பற்றி ஏற்கனவே அறிந்திராத ஒருவருக்கு இந்தச் செய்தியை எவ்வாறு விளக்குவீர்கள்? அவரது அன்பு, அற்புதமான குணம்பற்றிய எதார்த்தத் தைக் காட்டுகிற என்ன ஆதாரத்தைக் கொடுப்பீர்கள்?*

4 *தேவ அன்புபற்றிப் பேசுவது ஒன்று, நம் வாழ்க்கையில் அந்த அன்பை வெளிப் படுத்துவதும் பிரதிபலிப்பதும் வேறொன்று. என்னென்ன ‘பரிசுத்த கிரியைகள்’ நம்மைச் சுற்றியுள்ளோருக்கு தேவனுடைய அன்பை வெளிப்படுத்தமுடியும்?*

# மூங்கில் திரையைத் திறக்கும்போது

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

ரஷ்யாவில் உள்ள மாஸ்கோ சர்வதேச செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபையில், திருவிருந்து ஆராதனையின்போது, அந்தக் கொரிய மாணவனின் கால்களைக் கழுவ நான் முழங்காலிட்டபோது, அவனுக்கு ஏதாவது ஜெப வேண்டுகோள்கள் இருக்கின்றனவா என்று கேட்டேன். "வட கொரியாவுக்காக ஜெபியுங்கள். இயேசுவின் வருகை துரிதப்படும்படி அங்கே சுவிசேஷம் சொல்லப்படவேண்டும்" என்று சொன்னான். அவன் மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் படித்துவந்தான்.

2006இல் அது நடந்தது, தென் கொரிய செவந்த்–டே அட்வென்டிஸ்டுகள் வடகொரியாவின் தங்கள் சகோதர சகோதரிகளைக்குறித்து பாரம் கொள்ளவேண்டியதைப் புரிந்துகொண்டேன். சுவிசேஷத்தை உலகத்திற்கு அறிவிக்கவேண்டிய சபை ஊழியப்பணியில் வடகொரியாவில் இன்னும் அந்த ஊழியம் நடைபெறாமலேயே இருக்கிறது; அந்த மூங்கில் திரை திறக்கப்படுவதற்கான வழிகளைக்காண தென்கொரிய அட்வென்ட்டிஸ்டுகள் முயல்கிறார்கள்.

அட்வென்டிஸ்ட் திருச்சபை பணியானது 1904இல் வடக்கே ஆரம்பித்து, அதன் பிறகே தென் பகுதிக்குப் பரவியது. இன்று தெற்கில் 5.2 கோடி மக்களில் 285,000 சபை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். ஆனால் 2.6 கோடி மக்கள் தொகையுள்ள வட தேசத்தில் ஒரு அட்வென்ட்டிஸ்ட்கூட இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் வடக்கிலும் தேவனுக்கு ஒரு கூட்ட மக்கள் இருப்பதாகச் சொல்கிறார் பியோம் ஸியோக் ஓ; இவர் வட கொரியாவுக்கான ஊழியத்தை மேற்பார்வையிடும் வட ஆசிய பசிஃபிக் டிவிஷனின் இயக்குனர். வட கொரியாவைச் சேர்ந்த ஒரு பெண்ணைப்பற்றிச் சொன்னார். அவள் சனிக்கிழமையில் வேலை செய்யாமல் இருப்பதற்காக, தான் வியாதிப்படும்படி ஓய்வுநாள் தோறும் காலையில் சோயா சாறு கூழைக் குடித்திருக்கிறாள். அதற்காக அவளை சிறையில் போட்டபோது, சிறைக்குள் ஒரு வேதாகமத்தை இரகசியமாகக் கொண்டுசென்றாள். அதைப் புதைத்தவைத்து, நேரம் கிடைக்கும்பது வாசித்துவந்தாள். பிறகு தான் சுதந்திரமாக ஆராதனை செய்யும்படி தென் கொரியாவுக்குத் தப்பிச்சென்றாள். வடதேசத்தின் எல்லை திறக்கப்படும்போது அங்கே செல்ல தலைவர்கள் ஆயத்தமாகி வருகிறார்கள்.

அதற்கிடையில், வடகொரியாவிலிருந்து தப்பிவந்தவர்கள்மீது தென்கொரிய அட்வென்டிஸ்டுகள் கவனம் செலுத்துகிறார்கள். அவ்வாறு வந்த ஒருவருக்கு சபை உதவியாளர் ஒருவரும் அவரது மனைவியும் வீட்டைச் சுத்தப்படுத்தவும், உணவு ஆத்தம்செய்யவும், அரசு ஆவணங்களைத் தயார்செய்யவும் உதவினார்கள். ஆறுமாதங் கள் கழித்து, அவர் இயேசுவை ஏற்றுக்கொண்டதாகச் சொல்கிறார், அந்த உதவியாளர் மற்றும் அவரது மனைவியின் சபைப் போதகர் சாங் ஸியோப் லீ (படத்தில் இருப்பவர்).



அவ்வாறு தப்பிவந்த இன்னொருவரால், வடகொரியாவிலுள்ள தன் மனைவியையும்பிள்ளைகளையும்நினைத்து தூங்கமுடியவில்லை. போதகர் லீ அவருக்காக ஜெபித்தார்; பிறகு அந்த நபர் இயேசுவை ஏற்றுக்கொண்டார்; வேதாகமத்தை வாசித்தார். இந்த அனுபவங்கள், அதுபோன்ற நபர்களுக்கு உதவ போதகருக்கு ஊக்கமளித்திருக்கிறது.